The Hindu (English)

Dated: 04.03.2025


# Trinamool to give more 'evidence' on voter ID row

## Congress accuses Election Commission of being complicit in voter list manipulation; INDIA bloc to likely raise issue in the second part of the Budget Session of Parliament beginning on March 10

**The Hindu Bureau**
NEW DELHI

Rejecting the Election Commission's clarification on the issue of duplicate voter identity cards, the Trinamool Congress said here on Monday that the poll panel had admitted to the error, but had not "accepted it". The party promised to produce more evidence on the issue within 24 hours.

Wading into the row, the Congress on Monday evening issued a statement accusing the commission of being complicit in voter list manipulation. Sources said the INDIA bloc would unitedly raise the issue in the second part of the Budget Session that begins on March 10.



**Voicing issues:** Trinamool Congress leaders Sagarika Ghose, Derek O'Brien and Kirti Azad during a press conference in New Delhi, on Monday. R V MOORTHY

Derek O'Brien, accompanied by Trinamool Rajya Sabha Deputy Leader Sagarika Ghose and Lok Sabha member Kirti Azad, shared a list containing the details of 129 voter ID cards from West Bengal and Haryana that had the same number.

"We want only residents of a State to vote in that State. Only voters of Bengal vote in Bengal... Voters will not be allowed to vote as their votes will be cast by people with identical EPIC numbers," Mr. O'Brien said. He alleged it was an attempt to allow voters from other States to vote in West Bengal that goes to the polls next year. "This is unacceptable," he said at a press conference in New Delhi.

Mr. O'Brien said the EC's statement on Sunday was an admission of the error but it had not accepted it yet. "Limited appreciation of the EC. I say limited because EC is admitting the error but not accepting the error. In the next 24 hours, we humbly ask the EC to also accept the error. If not, we will share a document at 9 a.m. on Tuesday morning," he said.

In a statement, the Congress's newly constituted Empowered Action Group of Leaders and Experts (EAGLE) on electoral issues, without naming the Trinamool, said that there were some "startling developments" on the issue of voter list manipulation. "A unique ID for every Indian voter is the fundamental requirement and premise of a clean voter list. Multiple voters having the same voter identity number is as bizarre as multiple vehicles bearing the same registration number in the country. It is unheard-of in any electoral democracy," the statement said.

The Congress recalled its earlier allegation about manipulation of electoral rolls in Maharashtra.

"It is clear that the ruling BJP wins or attempts to win elections by manipulating voter lists in connivance with the Election Commission," the statement said.

West Bengal Chief Minister Mamata Banerjee on Thursday had raised the issue first. She alleged that the BJP was adding fake voters from other States to the electoral rolls in Bengal.

"The names of outsiders have been added to the voter list, so that people of Bengal are unable to cast their votes. Outsiders from Bihar, Haryana and other States will be brought to Bengal by trains to win the Bengal election," she said. Responding to her allegation, the poll panel had said it would rectify the issue and update its technology-driven platform.

The poll authority asserted that while the EPIC numbers of some of the voters "may be identical", other information, including demographic details, Assembly constituency and polling booth, was different.

Deccan chronicle

Dated: 04.03.2025

# TMC dismisses EC claim on voter card numbers

New Delhi: The Trinamool Congress on Monday dismissed the Election Commission's clarification on the duplication of voter card numbers, saying the poll panel must "accept" the mistake within 24 hours and carry an in-depth probe into this. Terming it an "epic scam", the TMC has threatened that if the EC fails to do it, the party would go all out to expose the anomalies with more documents on the issue from Tuesday.

The Times of India
Dated: 04.03.2025

## TMC asks EC to accept 'error' in electoral rolls

Trinamool Congress on Monday accused Election Commission of "fraud" and claimed there was "duplication of voter card numbers" in electoral rolls. TMC MPs Derek O'Brien, Kirti Azad and Sagarika Ghose demanded that EC "accept the error" in 24 hours and assure to rectify the rolls within 100 days, failing which the party would make more documents public on Tuesday to exposes the "scam". TMC is also preparing to raise the issue in Parliament along with other opposition parties. P8

# TMC accuses EC of 'fraud', says 'accept error in 24 hours'

**Mohua.Chatterjee**
@timesofindia.com

**New Delhi:** Trinamool Congress on Monday accused the Election Commission of 'fraud' and claimed there was 'duplication of voter card numbers' in electoral rolls.



TMC MPs **Derek O'Brien**, Kirti Azad and Sagarika Ghose demanded that the EC 'accept the error' in 24 hours and assure to rectify the rolls within 100 days, failing which the party would make more documents public on Tuesday to exposes the 'scam'.

The matter was first highlighted by West Bengal CM Mamata Banerjee on Feb 27 at a press conference here.

To mount pressure on the EC, TMC is preparing to raise the issue in Parliament along with other opposition parties when the House opens for the second half of the budget session on March 10. INDIA bloc parties are already in touch with TMC leaders on the issue, sources said.

Sharing a list containing details of 129 voter ID cards from West Bengal and Haryana that had the same elector photo identity card (EPIC) number, the TMC MPs called it an 'Epic scam'.

"We want only residents of a state to vote in that state. Only voters of Bengal to vote in Bengal... Voters will not be allowed to vote as their votes will be cast by people with identical EPIC numbers," O'Brien said, adding, "These people will be sneaked in from other states to vote. This is unacceptable."

## 'EC complicit in voter list manipulation'

Congress on Monday accused the Election Commission of India of being 'complicit in voter list manipulation' and cautioned that the opposition party is actively working on seeking remedy through 'legal, political, legislative and any other means'. "There are some startling developments on the issue of voter list manipulation that have surfaced. The same voter ID number is being used for several voters. This is utterly shocking," Congress's Empowered Action Group of Leaders and Experts (EAGLE) said in a statement. TNN

Azad alleged that most of the duplicate names found on the electoral rolls by TMC were of people from 'BJP-ruled states' and that 'it needs to be probed who are the EC officials involved in this'. "Our leader Mamata Banerjee has warned that she can sit on a hunger strike at the EC office in Delhi," he added.

The EC, which has clarified that two voters with the same EPIC number will still be voting in different polling booths and states mentioned in their respective EPIC cards, is expected to discuss solutions to end this duplicity in EPIC numbers at its two-day conference with chief electoral officers of all states and Union Territories starting here on Tuesday.

Amid reports flagging issuance of identical voter card numbers to electors in two different states, the EC on Sunday said it would rectify the issue and update its platform.

D.T. Next

Dated: 04.03.2025

# Admit poll roll lapse or face more heat: TMC

**NEW DELHI: The Trinamool Congress on Monday expressed dissatisfaction with the Election Commission's response on the duplication of voter card numbers, saying the poll panel must accept the error within 24 hours.**

Addressing a press conference here, TMC Rajya Sabha Parliamentary Party Leader Derek O'Brien said if the EC fails to do it, the party would release more documents related to the issue on Tuesday morning.



O'Brien, along with TMC Rajya Sabha deputy leader Sagarika Ghose and Lok Sabha MP Kirti Azad, displayed lists with details of voter ID cards with the same EPIC number.

"We want only residents of a state to vote in that state. Only voters of Bengal to vote in Bengal... Voters will not be allowed to vote as their votes will be cast by people with identical EPIC numbers," O'Brien said.

"These people will be sneaked in from other states to vote. This is unacceptable," he added. Amid reports flagging issuance of identical voter card numbers to electors in two different states, the EC on Sunday said it would rectify the issue and also update its technology-driven platform.

The poll authority asserted that while the elector photo identity card (EPIC) numbers of some of the voters "may be identical", the other details, including demographic details, assembly constituency and polling booth, are different.

Terming it an "Epic Scam", O'Brien alleged that the poll panel issued the statement after the TMC announced that it was going to hold a press conference on the issue.

The TMC leaders also demanded an in-depth investigation into the matter.They shared a list containing the details of 129 voter ID cards from West Bengal and Haryana that had the same EPIC number.

Daily Thanthi

Date: 04.03.2025

ஒரே வாக்காளர் அட்டை எண், பலருக்கு ஒதுக்கீடு

# தவறை ஏற்றுக்கொள்ள தேர்தல் கமிஷனுக்கு 24 மணி நேர 'கெடு'

## திரிணாமுல் காங்கிரஸ் எச்சரிக்கை

புதுடெல்லி, மார்ச்.4-

ஒரே வாக்காளர் அட்டை எண், பலருக்கு ஒதுக்கப்பட்ட விவகாரத்தில், தனது தவறை ஏற்றுக்கொள்ள தேர்தல் கமிஷனுக்கு திரிணாமுல் காங்கிரஸ் கட்சி 24 மணி நேர 'கெடு' விதித்துள்ளது.

### தேர்தல் கமிஷன் விளக்கம்

ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் ஒரு வாக்காளருக்கு அளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை எண், இன்னொரு மாநிலத்தில் இன்னொரு வாக்காளருக்கும் அளிக்கப்பட்டு இருப்பதாக சமீபத்தில் சர்ச்சை எழுந்தது.

இது, கள்ள ஓட்டு போட வழிவகுக்கும் என்றும், மராட்டியம், டெல்லி ஆகிய மாநில சட்டசபை தேர்தல்களில் பா.ஜனதா இப்படித்தான் வெற்றி பெற்றது என்றும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியது. அதற்கு தேர்தல் கமிஷன் விளக்கம் அளித்தது. அதில், ஒரே வாக்காளர் எண் இருந்தபோதிலும், வாக்காளரின் முகவரி, சட்டசபை தொகுதி பெயர், வாக்குச்சாவடி பெயர் ஆகியவை வெவ்வேறாக இருக்கும் என்றும், அவரவருக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடியில்தான் வாக்களிக்க முடியும் என்றும் தேர்தல் கமிஷன் கூறியிருந்தது.

### தவறை ஏற்கவில்லை

இந்நிலையில், இதுதொடர்பாக, டெல்லியில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை குழு தலைவர் டெரிக் ஓ பிரையன் நேற்று பேட்டி அளித்தார். அவருடன் அக்கட்சியின் மாநிலங்களவை துணைத்தலைவர் சகாரிகா கோஸ், மக்களவை எம்.பி. கீர்த்தி ஆசாத் ஆகியோர் உடன் இருந்தனர். டெரிக் ஓ பிரையன் கூறியதாவது:-

வாக்காளர் அடையாள அட்டை எண் ஊழல் என்று இதை சொல்லலாம். நாங்கள் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தப் போகிறோம் என்று தெரிந்தவுடன் தேர்தல் கமிஷன் விளக்கம் அளித்துள்ளது. ஆனால், தேர்தல் கமிஷனை ஓரளவுதான் பாராட்ட முடியும். ஏனென்றால், தேர்தல் கமிஷன், தவறை ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால், தனது தவறை ஏற்றுக்கொள்ளவில்லை.

### 24 மணி நேர 'கெடு'

அடுத்த 24 மணி நேரத்தில், தேர்தல் கமிஷன் தனது தவறை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், செவ்வாய்க்கிழமை (இன்று) காலை 9 மணிக்கு கூடுதல் ஆவணங்களை வெளியிடுவோம். ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் வசிப்பவர்கள் மட்டுமே அந்த மாநிலத்தில் வாக்களிப்பதை நாங்கள் விரும்புகிறோம். மேற்கு வங்காள வாக்காளர்கள் மட்டுமே அங்கு வாக்களிக்க வேண்டும்.

### விரிவான விசாரணை

ஆனால், ஒரே வாக்காளர் அட்டை எண் இருந்தால், போலிகள் மற்ற மாநிலங்களில் இருந்து மேற்கு வங்காளத்துக்கு வந்து வாக்களித்து விடுவார்கள். இதனால், உண்மையான வாக்காளர்கள் வாக்களிக்க முடியாமல் போய்விடும். இதை ஏற்க முடியாது. இப்பிரச்சினை குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஒரே அடையாள எண் கொண்ட வாக்காளர் அட்டை விவரங்களையும் டெரிக் ஓ பிரையன் வெளியிட்டார். அவற்றில் பெரும்பாலானவை, பா.ஜனதா ஆளும் மாநிலங்களை சேர்ந்தவை என்றும் அவர் கூறினார்.

Dinamalar

Dated: 04.03.2025

# தேர்தல் கமிஷன் தவறை திருத்த 24 மணி நேர கெடு விதித்த மம்தா

**புதுடில்லி, மார்ச் 4–**

"தேர்தல் கமிஷன் தன் தவறை, 24 மணி நேரத்திற்குள் ஒப்புக்கொள்ள வேண்டும். இல்லையேல், கூடுதல் ஆதாரங்களை இன்று காலையில் வெளியிடுவோம்," என, திரிணமுல் காங்கிரஸ் கட்சியின் ராஜ்யசபா எம்.பி.,க்கள் குழு தலைவர் டெரக் ஓ பிரையன் கூறினார்.

மேற்கு வங்கத்தில், முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமுல் காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. இந்நிலையில், முதல்வர் மம்தா நேற்று முன்தினம் கூறியதாவது:

வரும் சட்டசபை தேர்தலில் வெற்றி பெறுவதற்காக, பா.ஜ.,வுக்கு தேர்தல் கமிஷன் மறைமுகமாக உதவி வருகிறது. மேற்கு வங்கத்தில் உள்ள வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண் போலவே, குஜராத் மற்றும் ஹரியானாவில் உள்ள வாக்காளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற போலி வாக்காளர்கள் வாயிலாக வெற்றி பெற, பா.ஜ., முயற்சிக்கிறது.

இவ்வாறு கூறினார்.

அதற்கு பதிலளித்து, தேர்தல் கமிஷன் வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'ஒரே வாக்காளர் புகைப்பட அடையாள எண் இருப்பதால் மட்டும், பிற மாநிலத்தவர் மற்றொரு மாநில ஓட்டுச்சாவடியில் ஓட்டளித்து விட முடியாது. தொகுதி மறுசீரமைப்பின் போது, இதுபோல நடக்க வாய்ப்புள்ளது. எனினும், தவறை திருத்திக் கொள்கிறோம்' என தெரிவித்திருந்தது.

இந்த விவகாரத்தை டில்லியில் நேற்று மீண்டும் கிளப்பிய, திரிணமுல் காங்., ராஜ்யசபா எம்.பி., டெரக் ஓ பிரையன் கூறியதாவது:

தேர்தல் கமிஷன், தான் செய்த தவறுகளை ஒப்புக்கொண்டு பிரச்னையை சரிசெய்ய வேண்டும். அதற்காக அந்த அமைப்பிற்கு, 24 மணி நேரம் கெடு விதிக்கிறோம். இல்லையெனில், இன்று காலை மேலும் பல ஆதாரங்களை வெளியிடுவோம்.

பா.ஜ., ஆளும் மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு, மேற்கு வங்கத்தில் புகைப்பட அடையாள அட்டை எண் வழங்கப்பட்டது என்பதை விளக்குவோம்.

Dinamani

Date: 04.03.2025

# வாக்காளர் பட்டியல் முறைகேட்டில் தேர்தல் ஆணையம் உடந்தை

## காங்கிரஸ் குற்றச்சாட்டு

புது தில்லி, மார்ச் 3: வாக்காளர் பட்டியல் முறைகேட்டில் தேர்தல் ஆணையம் உடந்தையாக உள்ளது என்று காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

காங்கிரஸ் தலைவர் மற்றும் நிபுணர்கள் அடங்கிய அதிகாரமளிக்கப்பட்ட செயற்குழுவில் அக்கட்சியைச் சேர்ந்த அஜய் மாக்கன், திக்விஜய் சிங், அபிஷேக் சிங்வி உள்பட 8 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழு திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கையில், 'ஒவ்வொரு இந்திய வாக்காளருக்கும் தனித்துவ அடையாள அட்டை இருக்கவேண்டியது அடிப்படை தேவையாகும். அத்துடன் அது குறைபாடுகள் இல்லாத வாக்காளர் பட்டியலுக்கான கோட்பாடுமாகும்.

ஆனால், ஒரு மாநிலத்தில் ஒரே தொகுதிக்குள் உள்ளவர்கள், வேறு மாநிலங்களில் உள்ளவர்கள் என பல வாக்காளர்களுக்கு ஒரே வாக்காளர் அடையாள எண் பயன்படுத்தப்படுகிறது. இது பல வாகனங்களுக்கு ஒரே பதிவெண் உள்ளதுபோல பெரிதும் விசித்திரமாக உள்ளது.

இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் கடுமையாக மௌனம் சாதிக்கிறது. இதன்மூலம், வாக்காளர் பட்டியல் முறைகேட்டுக்கு தேர்தல் ஆணையம் உடந்தையாக உள்ளது என்றே நம்பத் தோன்றுகிறது.

இதுகுறித்து ஆதாரத்துடன் தேர்தல் ஆணையத்திடம் முறையிட்டபோது பல மாநிலங்களில் ஒரே வாக்காளர் அடையாள எண் பயன்படுத்தப்பட்டாலும், ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த எண் ஒரு வாக்காளருக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்தது. ஆனால், அதுவும் பொய்யான பதிலாகவே உள்ளது.

ஏனெனில் ஒரே மாநிலம் மற்றும் ஒரே தொகுதியில் உள்ள பல வாக்காளர்கள் ஒரே அடையாள எண்ணைப் பயன்படுத்துகின்றனர்.

இதைச் சுட்டிக்காட்டிய போது தேர்தல் ஆணையம் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

இதன்மூலம் தேர்தல் ஆணையத்துடன் ரகசியமாக கூட்டு சேர்ந்து வாக்காளர் பட்டியல்களில் முறைகேட்டில் ஈடுபட்டு ஆளும் பாஜக வெற்றி பெறுவதும், வெற்றி பெற முயற்சிப்பதும் தெளிவாகத் தெரிகிறது.

இதற்கு சட்டம், அரசியல் உள்ளிட்ட வழிகளில் தீர்வு காண காங்கிரஸ் தொடர்ந்து பணியாற்றி வருகிறது' என்று தெரிவிக்கப்பட்டது.

Dinakaran

Date: 04.03.2025

ஒரே வாக்காளர் அட்டை எண் மோசடி

# 24 மணி நேரத்தில் தவறை ஒப்புக் கொள்ள வேண்டும்

## தேர்தல் ஆணையத்திற்கு திரிணாமுல் கெடு

புதுடெல்லி, மார்ச் 4: வெவ்வேறு மாநிலங்களில் ஒரே வாக்காளர் அட்டை எண் மோசடியை தேர்தல் ஆணையம் 24 மணி நேரத்தில் ஒப்புக் கொள்ளாவிட்டால், கூடுதல் ஆவணங்களை வெளியிடுவதாக திரிணாமுல் காங்கிரஸ் கெடு விதித்துள்ளது.

மகாராஷ்டிரா, டெல்லியை போல மேற்கு வங்கத்திலும் வாக்காளர் பட்டியலில் மோசடி செய்த வெற்றி பெற பாஜ திட்டமிட்டிருப்பதாக மேற்கு வங்க முதல்வரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி சமீபத்தில் குற்றம்சாட்டியிருந்தார். இது குறித்து நேற்று முன்தினம் விளக்கம் அளித்த தேர்தல் ஆணையம், "வெவ்வேறு மாநிலங்களில் வாக்காளர்களுக்கு ஒரே அடையாள அட்டை எண் தரப்பட்டிருந்தாலும், தொகுதி, வாக்குச்சாவடி மையங்கள் வேறுபடும். நிர்ணயிக்கப்பட்ட தொகுதியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் மட்டுமே வாக்களிக்க முடியும். எனவே ஒரே வாக்காளர் அட்டை எண் தரப்பட்டிருப்பது போலி வாக்காளர்களைக் குறிக்காது" என்றது.

இந்த விளக்கத்தை திரிணாமுல் காங்கிரஸ் ஏற்கவில்லை. இந்நிலையில், அக்கட்சியின் மாநிலங்களவை தலைவர் டெரெக் ஓ பிரையன், மூத்த எம்பிக்கள் சகாரிகா கோஸ், கீர்த்தி ஆசாத் ஆகியோர் நேற்று பத்திரிகையாளர்களை சந்தித்து பேசியதாவது:

ஒரு மாநிலத்தில் வசிப்பவர்கள் மட்டுமே அந்த மாநிலத்தில் வாக்களிக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். மேற்கு வங்க வாக்காளர்கள் மட்டுமே இங்கு வாக்களிக்க வேண்டும். வெளிநபர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். அப்படிப்பட்ட மற்ற மாநிலத்தவர்களை ரகசியமாக அழைத்துவரப்படுகிறார்கள். இதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இதற்கு பின்னணியில் பாஜவின் சதித்திட்டம் இருப்பது குறித்து விசாரிக்கப்பட வேண்டும். ஒரு விஷயத்திற்காக தேர்தல் ஆணையத்தை பாராட்டுகிறோம். அவர்கள் வாக்காளர் அட்டையில் மோசடி நடந்திருப்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் அதை முழுமையாக ஒப்புக் கொள்ளவில்லை. தேர்தல் ஆணையத்திற்கு 24 மணி நேரம் அவகாசம் தருகிறோம். அதற்குள் தவறை ஒப்புக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் கூடுதல் ஆவணங்களை செவ்வாய் கிழமை காலை 9 மணிக்கு வெளியிடுவோம் என்றனர்.